## 1. பண்பாட்டுப் பரிமாற்றம் (Exchange of Cultural Value)

மற்றவர்களது நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம், நடை உடை ஆகியவற்றை அறிய ஆவல் கொண்டதால்தான் சுற்றுலா தோன்றியது. மார்க்கோபோலோவும் இபின்பதூதாவும் பிற நாட்டினரின் சமுதாய வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டியிருக்கின்றனர். இன்றும் பெரும்பான்மையான சுற்றுலாப் பயணிகள் வரலாற்று மதிப்புமிக்க நினைவுச் சின்னங்களையும், கலைச்சிறப்பும் பழமையும் மிக்க அருங்காட்சியகங்களையும் பார்வையிடுவது பண்பாட்டுப் பெருமையை அறிவதற்கேயாகும். கலைநயமிக்க தற்காலத்திய கட்டடங்களையும், கலைச்சின்னங்களையும் கண்டுகளிப்பதைவிட, பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட, தொன்மையான கலைப் பெட்டகங்களே இன்று பயணியரைக் கவர்ந்திழுக்கின்றன. இதனைப் போன்று கலை, கலாச்சார விழாக்களும் பயணியரை மகிழ்விக்கின்றன.

சுற்றுலாவினால் ஒரு நாட்டின் பழக்க வழக்கம், உடை, உணவு, பண்பாடு அடுத்த நாட்டில் பரவுகிறது. இன்று தமிழ்நாட்டுப் பெண்களின் உடைகளில் பெருந் தாக்கம் உள்ளது. இது ஒரு பண்பாட்டுப் பரிமாற்றம்.

### அ. அருங்காட்சியகங்களும், ஆவணக் காப்பகங்களும்

அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல் பொருட்கள், அந்நாட்டின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக விளங்குகின்றன. இவ்வகையில் சென்னை அருங்காட்சிகமும், டெல்லி தேசிய அருங்காட்சியகமும் குறிப்பிடத்தக்கன. சற்று பிற்காலத்தியதாக இருப்பினும் ஆவணக் காப்பகங்களில் பாதுகாக்கப்படும் பல்வேறு ஆவணங்கள் சமுதாயத்தின் பிரதிபலிப்பே ஆகும். சென்னை எழும்பூரில் உள்ள ஆவணக்காப்பகம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### ஆ. வரலாற்று நினைவுச் சின்னங்கள்

ஹரப்பா, மொஹஞ்சதாரோ அகழாய்வு இடங்கள், அஜந்தா, எல்லோரா, எலிபெண்டா திருக்கோயில்கள், அசோகரின் கற்றூண்கள், குப்தர் காலத்திய இரும்புத்தூண், ஹம்பி ஆகியனவும், தமிழகத்தின் ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு அகழாய்வுப் பகுதிகளும் முத்தரையரது கலைக்கோயில்களும், பல்லவர்களது மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில்களும், தஞ்சைப் பெருவுடையார் கோயில், தாராசுரம் திருக்கோயில் முதலான சோழர் காலத்திய திருக்கோயில்களும் தொன்மைமிக்க இந்தியக் கலாச்சாரத்தின் மேன்மையை உணர்த்தும். இந்தியாவிற்கு வெளியில் கம்போடியாவில் உள்ள

Scanned by CamScanner

ஆங்கோர்வாட் கோயிலும் இந்தோனேஷியாவில் உள்ள போராபுதூர் சிற்பங்களும் சிரீலங்காவிலுள்ள மாந்தோட்டம், மாதோட்டக் கோயில்களும் இந்தியப் பண்பாட்டுப் பெருமைகளையே பறைசாற்றுகின்றன. அலெக்சாந்தர் நிறுவிய அலெக்சாண்டிரியா, நீண்ட நெடிய சீனப் பெருஞ்சுவர், வியத்தகு எகிப்தியப் பிரமிடுகள், சாய்ந்தும் விழாதிருக்கும் பைசாநகரக் கோபுரம், சிரியா நாட்டின் பல்மைரா என்னுமிடத்தில் இடிந்து கிடக்கும் சினோபியா அரசியின் அரண்மனை ஆகியவற்றைச் சுற்றுலாப் பயணியர் காணும்போது, அந்தந்த நாட்டின் கலை, கலாச்சாரப் பெருமைகளே கண்முன் தோன்றும். அடுத்து நினைவுச் சின்னங்களும் பாதுகாக்கப்படுகின்றன. கலாச்சாரச் சினனங்களைப் பேணிப் பாதுகாக்கச் செய்யும் செலவும் வீணாவதில்லை. மாறாக அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணியரைக் கவர்ந்து நம்நாட்டின் வருவாயைப் பெருக்குகின்றது.

**இ. கலை, கலாச்சார விழாக்கள்**

இன்று ஒவ்வொரு நாடும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியரைக் கவர, வெளிநாடுகளில் தம் நாட்டுக் கலாச்சாரப் பாரம்பரியத்தின் சிறப்பைச் சித்திரிக்கும் கலை விழாக்களைப் பெரும் பொருட்செலவில் நடத்தி வருகின்றன. இதில் நாடக, நாட்டிய, இசை நிகழ்ச்சிகள் இடம் பெறும். 1991 இல் ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா முதலான நாடுகளில் இந்தியக் கலை விழாக்கள் நடத்தியதை இங்கே நாம் நினைவு கூறலாம். உள்நாட்டிலும் சிறப்பு நாட்களில் கலை விழாக்கள், கிராமியக் கலை விழாக்கள் ஆகியன நிகழ்த்தப் பெறுகின்றன. இவற்றால் சுற்றுலாப் பயணியர் மகிழ்ச்சியடைகின்றனர்; நம் பண்டைய கலைகளும் அழிவினின்றும் காப்பாற்றப் பெறுகின்றன; கலைஞர்களும் பயன் பெறுகின்றனர்.

## 2. மனித நேயம் வளர்கின்றது

சுற்றுலாவின் மூலம் மனிதநேயம் வளர்கின்றது. பிறபகுதி மக்களுடன் நெருங்கிப் பழகுவதால் நட்புறவு வளர்கிறது. கருத்து வேறுபாடுகள் மறைகின்றன. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நேசிக்க முடிகிறது. இதனால் பிராந்திய வெறி மறைந்து, பொதுமை உணர்வும், நாட்டின் ஒட்டு மொத்த முன்னேற்றமும் மனதில் பதிகின்றன. தேசிய உணர்வு பெருகுகிறது. கோல்ட்ஸ்மித் கனவு கண்ட 'உலகக் குடிமகன்' (Citizen of the world) எனும் உணர்வும், கணியன் பூங்குன்றன் கூறிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் பரந்த மனப்பாங்கும் வளர்கின்றன.

Scanned by CamScanner

### 3. தேசிய ஒருமைப்பாடு வளர்கிறது (Promotion of National Integration)

தேசிய ஒருமைப்பாடு வளர சுற்றுலாவும் ஒரு காரணமாகும். சுற்றுலாவால் மத, இன, மொழி, பிராந்திய வேறுபாடுகள் மறைகின்றன. வட மாநிலத்தவா, தென் மாநிலத்தவா் என்ற பாகுபாடு குறைந்து தேசிய ஒருமைப்பாட்டு உணா்வு உருவாகின்றது. பிற பகுதி மக்களுடன் பழகும் போதுதான் அன்பு, நல்லெண்ணம் ஆகியன வளா்ந்து ஒற்றுமை வளா்கிறது. பல்வேறுபட்ட மொழி, கலாசாரம் நிலவும் இந்தியா போன்ற நாடுகளில் சுற்றுலா தேசிய உணா்வை வளா்க்க வல்லது.

### 4. இளைஞர்களிடையே நற்பண்புகளை உருவாக்குகிறது

சுற்றுலா இளைஞா்களிடையே நன்னடத்தையையும் நற்பண்புகளையும் உருவாக்குகிறது. (Moulds the Character of the Youth). இளைஞா்கள் சுற்றுலா, துணிகரச் சுற்றுலா, விளையாட்டுச் சுற்றுலா ஆகியவற்றில் பங்கேற்கும் போது அவா்களிடையே ஒற்றுமை உணா்வு, சேவை மனப்பான்மை, ஒருவரை ஒருவா் புரிந்து கொள்ளுதல், பொது நலப் பணியில் தனது பங்கைச் செலுத்துதல், நெறி முறைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் தலை வணங்குதல், பிறரது நற்பண்புகளைப் பின்பற்றல், தன்னாா்வத் தொண்டு, தலைமைப் பண்பு (Leadership), கடின உழைப்பு, விட்டுக் கொடுத்து உறவாடுதல், எச்சூழலுக்கும் ஈடு கொடுத்தல் (Adaptability) முதலான நற்பண்புகள் வளா்கின்றன; நோ்வழியில் செல்லவும் துணை புரிகின்றது.

### 5. தனிமனித அறிவு பெருகுதல்

சுற்றுலா, தனி மனிதனின் அறிவு வளர உதவுகிறது. பிற பகுதிகளையும், அயல்நாடுகளையும் பாா்வையிடுவதால் மக்களின் பொதறிவு வளா்கிறது. (Development of People's General Knowledge) அயல்நாடுகளின் வரலாறு, புவியியல், பண்பாடு, பொருளாதார நிலை, அறிவியல் முன்னேற்றம், தொழில் நுட்ப வளா்ச்சி, புதிய சிந்தனைகள் ஆகியவற்றை சுற்றுலாப் பயணி அறிந்து கொள்கிறான். கல்வி அறிவுடன் அனுபவ அறிவும் வளா்கிறது. கண்ணினால் கண்டறியும் நேரடி அறிவு அல்லது முதல் தரமான அறிவைப் பெற சுற்றுலாத் துணை புரிகின்றது.

### 6. மனிதனுக்கு மகிழ்ச்சி தருகிறது

சுற்றுலா ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியையும், மன நிம்மதியையும், புத்துணா்ச்சியையும் தருகின்றது. உழைத்து அலுத்துப் போன தொழிலாளிக்கு

Scanned by CamScanner

மனச் சோர்வையும், உடற்களைப்பையும் போக்குகிறது. எந்திரத்துடனும் எழுத்துக்களுடன் போராடியவன் இயற்கைக் காட்சியைக் கண்டு, ரசித்து கிளர்ச்சி அடைகிறான். புதிய சூழலில் புத்துணர்ச்சி பெறுகிறான். இயற்கைக் காட்சிகளும், கடற்கரை மணற்பரப்பும் மனிதனுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன (Gives happiness to man). மகிழ்ச்சி தரும் சுற்றுலா உடல் நலத்தைப் பேணவும் துணை புரிகிறது. சமுதாயச் சீர்கேடுகள் மறைகின்றன. எனவே ஒட்டு மொத்த சமுதாயமும் நலமடைகிறது.

**7. வாழ்க்கைத் தரம் மேன்மையடைகிறது**

சுற்றுலாவினால் ஒரு நாட்டின் வருவாய் கூடுகிறது. அதேசமயம் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்கிறது. 1997 ஆம் ஆண்டில் உள்நாட்டுச் சுற்றுலாவின் மூலம் 156 மில்லியன் ரூபாய்களையும், அயல்நாட்டுச் சுற்றுலாவின் மூலம் 23,74,094 ரூபாய்களையும் இந்தியா பெற்றது. இதனால் ஒட்டு மொத்தமாக 21.1 மில்லியன் பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றனர். பலர் பலவகைகளில் பலனடைந்தனர். சுற்றுலாத் தொடர்பான தொழில்களில் ஈடுபட்டோர் அனைவருக்கும் வருவாய் கூடியது. அதிக வருவாய் கிடைத்ததால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்கிறது. எடுத்துக்காட்டாக ஜெய்ப்பூர் மக்கள், அயல்நாட்டுப் பயணியரின் வருகையால் வருவாய் பெறுகின்றனர். சுற்றுலாப் பயணியர் வராமல் இருந்தால் அவர்களுக்கு வருமானம் இல்லை. ஆகவே சுற்றுலா மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் துணை புரிகிறது எனலாம்.

**8. உலக அமைதியும் பன்னாட்டு ஒற்றுமை உணர்வும் உண்டாகிறது**

பன்னாட்டுச் சுற்றுலாவால் உலக மக்களிடையே ஒற்றுமை உணர்வு உருவாகிறது. (Promotes International Understanding) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை நாம் இன்முகம் காட்டி, இன்சொல்பேசி, வரவேற்று உபசரிக்கிறோம். இதனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, நெருங்கிப் பழகி நட்பை வளர்த்துக் கொள்கிறோம். அவர்கட்குப் பல வகைகளில் உதவுகிறோம். இதனால் இருவரிடையே நல்லெண்ணம் உருவாகிறது. தனி நபர் நட்பு விரிந்து, நாடுகளுக்கிடையே நல்லெண்ணமும் நட்பும் வளர்கின்றன. நாடுகளிடையே உள்ள பகைமை உணர்வு, தப்பெண்ணம், பொறாமை, சமய வெறி, மொழி வெறி, நிற வெறி ஆகியவை மறைகின்றன. சமூகப் பரிமாற்றம் ஏற்படுகிறது. அவர்களைப் பார்த்து நாமும், நம்மைப் பார்த்து அவர்களும் சில புதிய பழக்க வழக்கங்களையும், நடை உடை பாவனைகளையும், உணவு முறைகளையும் மாற்றிக் கொள்கிறோம். மெட்லிக் என்பார் இச்சமுதாயத்

Scanned by CamScanner

நாகரிகத்தினைப் பாராட்டிப் பேசுவார். இதனால் ஒரு நாட்டின் நாகரிகம் இன்னொரு நாட்டிற்கும் பரவுகிறது.

## 9. அடிப்படை வசதிகள் பெருகுகின்றன

சுற்றுலா ஒரு நாட்டு மக்களின் அடிப்படை வசதிகளைப் பெருக்கத் துணை புரிகின்றது (Promotes Basic Facilities) அயலநாட்டுப் பயணிகளைக் கவர உள்நாட்டின் சாலை வசதி, சுகாதார வசதி, தண்ணீர் வசதி, வாகன வசதி, பொழுதுபோக்கு மையங்கள், தங்குமிட வசதி, மருத்துவ வசதி, மின்சார வசதி, நவீன மயமாக்கப்பட்ட தொழில் வசதி, கைவினைப் பொருள் உற்பத்தி ஆகியனவும் பலகோடி செலவில் செய்யப்படுகின்றன. இவையனைத்தும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு மட்டுமின்றி உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும் பொது மக்களுக்கும் பயன்படுகின்றன. எனவே உள்நாட்டு வசதிகள் பெருகுகின்றன.

## 10. வனவிலங்கு சரணாலயங்களும் தாவர வகைகளும் காக்கப் பெறல்

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியரின் வருகைக்காக உள்நாட்டில் உள்ள வனவிலங்கு புகலிடங்கள், இயற்கையெழில்கள், நீர்வீழ்ச்சிகள், அணைக்கட்டுகள், பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள் ஆகியன பேணிக்காக்கப் பெறுகின்றன. மேலும் அழகுபடுத்தப்படுகின்றன சீரமைக்கப்பெறுகின்றன. சில பொழுது போக்குமையங்கள் கவர்ச்சியாக்கப் படுகின்றன. கோடை வாழிடங்களில் உள்ள ஏரிகளிலும் பிச்சாவரம் முதலான மையங்களிலும் நவீனப் படகுகள் விடப்படுகின்றன. சுற்றுலா எனும் பெயரில் இவை பராமரிக்கப்படவும், அழகுபடுத்தப் பெறவும் வாய்ப்பு ஏற்படுகிறது. உள்நாட்டின் வரலாற்றுச் சின்னங்களும், நினைவ கங்களும் நன்கு பராமரிக்கப்பட சுற்றுலாத் துணை புரிகின்றது.

## 11. சமத்துவம் ஏற்படுத்துதல்

கலாச்சாரப் பெருமை மிக்க முன்னேறிவரும் நாடுகளுக்கு, முன்னேற்றமடைந்த நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணியர் வருகை புரிகின்றனர். இதனால் பொருளியல் சமத்துவம் மலர்கிறது. இதனால் வளர்ந்த, வளரும் நாடுகளிடையே நிலவும் சமூக, பொருளாதார வேறுபாடுகள் குறைய, மறைய சுற்றுலாத்துணை புரிவது புலனாகும்.

**முடிவுரை :** இவ்வாறு சுற்றுலா பலதரப்பட்ட மக்களிடையே அன்பு, பாசம், நட்பு, நல்லெண்ணம் உருவாகவும், வரலாற்று நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப் பெறவும், உலக நாடுகளிடையே அமைதி, ஒற்றுமை ஆகியன

Scanned by CamScanner

வளரவும், உள்நாட்டில் அடிப்படை வசதிகள் பெருகவும், மனிதனின் அறிவு பெருகவும், கலை மற்றும் கிராமியக் கலைகள் பேணிக்காக்கப் பெறவும் எல்லாவற்றிற்கும் மேலாக மனித நேயம் வளரவும் துணை புரிகிறது என்பதனைக் கண்டோம். இவற்றால் சுற்றுலாவின் சமூக, கலாச்சாரத் தாக்கம் மிகப்பெரியது என்பது அறியப்படுகின்றது.



கொனாரக் சூரியன் கோயிலில் நூலாசிரியர்

Scanned by CamScanner

# 7. சுற்றுலாவின் பொருளாதர முக்கியத்துவம்

## (ECONOMIC SIGNIFICANCE OF TOURISM)

சுற்றுலா இன்று ஒரு பொருளாதாரச் செயல்பாடாக வளர்ந்துள்ளது. உல்லாசத்திற்கும் இன்பத்திற்கும் சுற்றுலா என்ற நிலைமாறி இன்று உபரி வருமானத்திற்காக சுற்றுலாவை ஊக்குவிக்கும் காலம் வந்துவிட்டது. சுற்றுலாத் துறையினால் நாம் பல வழிகளில் பொருளாதார நன்மைகளைப் பெற்று வருகிறோம். இதனால்தான் ஒவ்வொரு அரசாங்கமும் சுற்றுலாவைக் கவனிக்க தனியாக அமைச்சகம் ஒன்றையும் அதன் தொடர்பான நிறுவனங்களையும் உருவாக்கி அதன் வளர்ச்சிக்கும் பலவிதமான திட்டங்களைத் தீட்டிவருகிறது. ஒரு நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பிராந்திய வளர்ச்சியைப் பெருக்குவதற்கும், அரசின் வருவாயைப் பெருக்குவதற்கும் ஒரு கருவியாக சுற்றுலா உள்ளது. சுருக்கமாகக் கூறினால் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் ஒரு உந்துசக்தியாக சுற்றுலா விளங்குகிறது.

### 1) சுற்றுலாவும் வாணிகச் சமநிலையும்

**(Tourism and Balance of Trade):**

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட கால அளவில் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களின் மொத்த மதிப்பும், பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் மொத்த மதிப்பும் சம அளவில் இருந்தால் அதனை நாம் பன்னாட்டு வாணிகச் சமநிலை என்கிறோம். அதேசமயம் ஏற்றுமதிப் பொருட்களின் மொத்த மதிப்பு இறக்குமதிப் பொருட்களின் மதிப்பைக் காட்டிலும் அதிகமாக இருந்தால் அதனை நாம் சாதகமான வாணிகச் சமநிலை (Favourable Balance of Trade) என்கிறோம். அதற்கு மாறாக ஏற்றுமதிப் பொருட்களின் மதிப்பைக் காட்டிலும் இறக்குமதிப் பொருட்களின் மொத்தமதிப்பு கூடுதலாக இருப்பின் அதனை பாதகமான வாணிகச் சமநிலை என்கிறோம்.

பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகள் சாதகமான வாணிகச் சமநிலையையும், வளர்ந்துவரும் நாடுகள் பாதகமான வாணிகச் சமநிலையைக் கொண்டுள்ளன. பாதகமான வாணிகச்சமநிலையை விரைவில் சீர்செய்யாவிடில் நாட்டின் பொருளாதரநிலை பாதிக்கப்படும். இதற்கு மிகவும் கைகொடுப்பது கண்ணுக்கு புலனாக ஏற்றுமதிகள் (Invisible exports) ஆகும். கண்ணுக்குப் புலனாகாத ஏற்றுமதிகளில் சுற்றுலா முக்கியமான இடம் வகிக்கிறது. சுற்றுலாவின் மூலம் அந்நியநாட்டு பணவரும்படியைப் பெருக்கி பாதகமான செலுத்து

Scanned by CamScanner

சமநிலையைக் குறைக்கலாம். முடிந்தால் போக்கவும் செய்யலாம். ஏனெனில் சுற்றுலாவினால் வரும் வருவாய் ஏற்றுமதித் தொகையுடன் சேரும்.

## 2) சுற்றுலாவும் அன்னியச் செலாவணியும்

**(Tourism and foreign Exchange) :**

ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையில் நிலவும் அனைத்து தொடர்புகள் பற்றிய பதிவேடே 'அயல்நாட்டு செலுத்து சமநிலை' (Balance of Payment) ஆகும். ஒரு நாட்டின் வாணிகச் சமநிலையுடன் கண்ணுக்குப் புலனாகாத பொருள்களின் வரவுகள் அனைத்தையும் கூட்டி பற்றுகளைக் கழித்துக் கொண்டால் செலுத்துதல் சமநிலை கிடைக்கிறது. அயல் நாட்டுப் பயணி கள் நம் நாட்டில் செலவிடும் பணம் புலனாகாத ஏற்றுமதியாகும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காகவும் உணவுக்காகவும் போக்குவரத்திற் காகவும், பொருட்களை வாங்கவும் செலவு செய்யும் தொகையானது அந்த நாட்டிற்கு அன்னியச் செலாவணியாகக் கிடைக்கிறது. இந்த அன்னியச் செலாவணி மூலம் பாதகமான வாணிகச்சமநிலையையும், பாதகமான செலுத்து சமநிலையையும் சமாளிக்க முடிகிறது. இந்த வகையில் சுற்றுலா மூலம் கிடைக்கும் வருவாய் ஒரு நாட்டிற்கு வரப்பிரசாதமாகவே உள்ளது. குறிப்பாக பாதகமான செலுத்துசமநிலையைக் கொண்டிருக்கும் பின்தங்கிய நாட்டின் சுமையைக் குறைப்பதில் சுற்றுலா முக்கியமானதோர் இடம் வகிக்கிறது.

சுற்றுலாவின் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டுவதில் இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது. இந்த துறையில் நமது அரசு குறைந்த பட்சத் தொகையை மூலதனமாக வைத்து அதிக அளவு லாபம் அடைகிறது. 1990-ம் ஆண்டு இந்தியா அந்நிய செலவாணியாக 2,103 கோடி ரூபாய் பெற்றது. 1991-ல் 2440 கோடியும், 1992-ல் 3,300 கோடியும், 1993-ல் 3,900 கோடி ரூபாயும் பெற்றது. கி.பி.2000-ம் ஆண்டில் அந்நிய செலவாணியாக ரூ.14,408.63 கோடி பெற்றது.

## 3) சுற்றுலாவும் தேசிய வருமானமும்

**(Tourism and National Income):**

சுற்றுலா மூலம் ஒவ்வொரு நாடும் பல வழிகளில் வருமானம் பெறுகின்றன. பொருட்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்பதைக் காட்டிலும் அதிகமான வருமானத்தைச் சுற்றுலாத்துறை தருகிறது. சுற்றுலா ஆய்வறிஞர்களான லிகோரிஷ், கெர்ஷா ஆகியோர் சுற்றுலா பற்றி

Scanned by CamScanner

கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள். ''சுற்றுலா முதலீடு ஏதும் தேவைப்படாத மிக எளிதான தொழில். ஒரு சமுதாயம் ஆண்டு முழுக்க ஒவ்வொரு நாளும் இரண்டு டஜன் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்க முடியுமானால் அது பொருளியல் வளர்ச்சியில் ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலர்கள் ஊதியப்பட்டியல்களைக் கொண்ட ஒரு புதிய தொழிற்சாலையைப் பெற்றுள்ளதற்கு ஒப்பாகும்'' என்று கூறுகின்றனர்.

அரசாங்கம் சுற்றுலாத் துறையிலிருந்து நேர்முக வரி மற்றும் மறைமுக வரி மூலம் வருவாயைப் பெறுகிறது. சுற்றுலாத்துறை வளர்ச்சிப் பணிகள் மூலம் கிடைக்கும் வருவாய் நேர்முக வரி ஆகும். மறைமுகவரி என்பது பயணிகளுக்குச் சேவை செய்தோ, உபசரித்தோ கிடைக்கும் வருவாய் ஆகும். மறைமுக வரிகளை கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்: a) தங்கும் அறை மீதான வரி b) உணவு மீதான வரி, c) சுற்றுலா சம்பந்தப்பட்ட தொழில் தொடங்குவதற்கான உரிமம் மூலம் பெறும் தொகை, d) நுழைவு வரி, e) சுங்கவரி, f) இறக்குமதி வரி, g) சொத்து பராமரிப்பு வரி, h) விமானத் தளங்களைப் பயன்படுத்துவதற்கான வரி போன்றவை ஆகும்.

உலகின் பல நாடுகளின் முதல்தர வருவாய் சுற்றுலா மூலமாகத்தான் கிடைக்கிறது. ஸ்பெயின், போர்ச்சுக்கல், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் வருவாயில் சுற்றுலா மூலம் வரும் வருவாயே முதல்நிலை வகிக்கிறது. இத்தாலி, எகிப்து, கிரிஸ் ஆகிய நாடுகளில் சுற்றுலா வருவாய் இரண்டாம் நிலை வகிக்கிறது. இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் சுற்றுலா மூலம் வரும் வருவாய் மூன்றாவது இடத்தைப் பிடிக்கிறது. சிங்கப்பூர் அரசு தனது வருவாயின் பெரும்பகுதியைச் சுற்றுலா மூலமே பெறுகிறது. அமெரிக்க வெர்ஜின் தீவின் வருவாயில் எழுபத்தைந்து சதவீதம் சுற்றுலா மூலம் கிடைக்கிறது. பர்படோஸ் நாட்டின் தேசிய வருமானத்தில் கால் பங்கு அந்த நாட்டின் சுற்றுலா வருவாயே உள்ளது என்பது வியப்பிற்குரியது. இவ்வாறு பெரும்பாலான நாடுகளின் தேசிய வருவாயில் சுற்றுலா மூலம் கிடைக்கின்ற வருவாய் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் விளைவாக தேசிய பொருளாதாரம் வளர்கிறது. 2001-ம் ஆண்டில் உலகில் சுற்றுலா மூலம் 476 மில்லியன் டாலர்கள் ஈட்டப்பட்டுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. கி.பி. 2000-ல் சுற்றுலா மூலம் அமெரிக்கா 76.9 பில்லியன் டாலர், ஸ்பெயின் 34.5 பில்லியன் டாலர், இத்தாலி 32.9 பில்லியன் டாலர், பிரான்ஸ் 31.5 பில்லியன் டாலர், இங்கிலாந்து 22.7 பில்லியன் டாலர் வருமானம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

## 4) பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைகிறது

**(Redures economic inequality):**

சுற்றுலா நாடுகளுக்கிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஓரளவு குறைக்கிறது. பெரும்பாலும் பணக்கார நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளுக்குப் பயணம் செய்கிறபோது

Scanned by CamScanner

அவர்களது பணம் பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரத்தை உயர்த்தப் பயன்படுகிறது. சுற்றுலாவை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் ஒரு நாடு பெருந்தொகையை நேரிடைவரி மூலமும் மறைமுகவரி மூலமும் பெறுகிறது. ஒரு நாடு எந்த அளவிற்கு அயல் நாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுக்கிறதோ அந்த அளவிற்கு அந்த நாடு அந்நிய செலாவணியைப் பெறுகிறது. அந்த வெளிநாட்டுப் பயணிகள் எத்தனை நாள் தங்குகின்றனரோ; எவ்வளவு பொருட்கள் வாங்குகின்றனரோ அந்த அளவிற்கு நாட்டின் வருவாய் உயர்கிறது. இதன் மூலம் அந்நிய செலாவணியை அதிகம் பெற்று தேசிய பொருளாதரத்தை உயர்த்த முடியும். இதனால் உலக நாடுகளுக்கிடையே காணப்படும் பொருளாதர ஏற்றத்தாழ்வு ஓரளவு குறைகிறது.

## 5) வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது

**(Employment opportunity):**

சுற்றுலாத்துறையானது சேவையை மையமாக வைத்து செயல்படும் தொழிற்கூடம் ஆகும். இதுவும் முழுக்க முழுக்க தொழிலாளர்களைக் கொண்டு செயல்படும் துறை ஆகும். இதில் பலதரப்பட்ட மக்கள் தங்கள் தகுதிக்கேற்ப பலவகையான வேலைவாய்ப்புகளைப் பெறுகிறார்கள். வேலையற்ற பட்டதாரிகள் சுற்றுலாவின் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளார்கள். இவ்வாறு லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கும் சுற்றுலாத்துறை வேலை வாய்ப்பை வழங்கும் அமுதசுரபியாக உள்ளது. சொல்லப்போனால் சுற்றுலா மற்றுமோர் வேலை வாய்ப்பு நிறுவனமே யாகும். 1999-2000-ம் வருட கணக்குப்படி 15.5 மில்லியன் மக்கள் இந்தியாவில் சுற்றுலாத்துறை மூலம் நேரடி வேலை வாய்ப்பு வசதி பெற்றார்கள். சுமார் 12.3 மில்லியன் மக்கள் மறைமுக வேலைவாய்ப்பு வசதிகளைப் பெற்றனர். உலக பயண மற்றும் சுற்றுலா கழகத்தின் (UNTTC) அறிக்கையின் படி 2010-ல் இந்தியாவில் 12.9 மில்லியன் மக்கள் நேரடி வேலை வாய்ப்பு பெருவார்கள்.

சுற்றுலாத் துறையில் முதலாளி முதல் பல வகையான தொழிலாளர் வரை எண்ணற்ற மக்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் நேரடித் தொழிலாளர்கள், மறைமுகத் தொழிலாளர்கள் என இருபிரிவுகள் உள்ளன. சுற்றுலா முகவர், வழிகாட்டி, ஓட்டுநர், விற்பனையாளர், வரவேற்பாளர், இசைக்கலைஞர் நடனமாதர், கணக்கர், எழுத்தர், உணவு தயாரிப்போர், பரிமாறுவோர், மேலாளர், தகவல் தருவோர் போன்றவர்கள் நேரடியாக சுற்றுலாத்துறையில் பணிபுரிகின்றனர். இவர்களைத் தவிர ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணைச் சுற்றுலாத் துறைகளும் வளர்ச்சியடைந்துள்ளன. அவைகளில் வேலைபார்ப்போர் மறைமுகத் தொழிலாளர் ஆவர். நட்சத்திர ஹோட்டல்களின் கட்டுமானப் பொறியாளர்கள், தொழிலாளர்கள், பஸ், ரயில் விமானங்களில் பணிபுரியும் பல வகைத் தொழிலாளர்கள், புகைப்படம் எடுப்போர், கைவினைப் பொருட்களை

Scanned by CamScanner

உற்பத்தி செய்வோர், விற்பவர்கள், கச்சாப் பொருள் விற்போர் போன்ற அனைத்துத் தொழிலாளர்களும் மறைமுகமாக சுற்றுலாத் துறையில் வேலை வாய்ப்பினைப் பெறுகிறார்கள்.

இவ்வாறு சுற்றுலா மூலம் தொழில் திறமை உள்ளவர்களும் திறமை இல்லாதவர்களும் வேலை வாய்ப்பினை பெறுகிறார்கள். சுற்றுலாத் துறைக்குள் அடங்கும் ஒவ்வொரு துறையும் மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கிறது. இவ்வாறு சுற்றுலா வேலை வாய்ப்பினை அளித்து நாட்டில் நிலவும் வேலையில்லாத திண்டாட்டத்தைப் போக்குகிறது. கி.பி 2010-ல் சுற்றுலா தொழில் உலகம் முழுவதும் 10 கோடிப்பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என்று கூறப்படுகிறது.

## 6) கைத்தொழில் வளர்ச்சி (Growth of handi-crafts):

சுற்றுலாவினால் தொழில்களும் கைத்தொழில்களும் வளர்ச்சியடை கின்றன. உள்ளூர் கைவினைப் பொருட்கள் புத்துயிர் பெற துணை புரிகிறது. பொதுவாகச் சுற்றுலாப் பயணிகளே அரிய கலைப்பொருட்களையும், பொம்மைகள், பைகள் போன்றவற்றை நினைவுப் பொருட்களாக வாங்கிச் செல்கின்றனர். இந்தியாவில் சுற்றுலாத் துறையினால் கைவினைப் பொருட்கள் அதிக அளவில் விற்பனையாகின்றன என்பதில் சந்தேகமே இல்லை. தஞ்சை தலையாட்டிபொம்மைகள், தஞ்சை கலைத் தட்டுகள், கன்னியாகுமரியில் உள்ள கிளிஞ்சல் பொருட்கள், சந்தன மாலைகள், மூங்கில் கூடைகள், பனைஓலைத் தொப்பிகள் ஆகியவைகள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் விரும்பி வாங்கப்படுகின்றன. இதனால் இத்தொழில்கள் நசித்துப் போகாமல் பாதுகாக்க முடிவதுடன் அந்தத் தொழில் செய்து அநேகக் குடும்பங்கள் பிழைப்பிற்கு வழி ஏற்படுகிறது.

## 7) சுற்றுலாவும் பிராந்திய வளர்ச்சியும் (Regional development):

சுற்றுலாவினால் பிராந்தியப் பகுதிகள் பெரிதும் வளர்ச்சியடைகின்றன. ஒரு நாட்டில் குறிப்பிட்ட மாநிலமோ அல்லது பிராந்தியப் பகுதியோ மிகவும் பின்தங்கிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டு வேலை வாய்ப்பு வசதி இல்லாமலோ அல்லது விளைச்சல் மற்றும் விவசாய வளர்ச்சிக்கான ஏற்ற விளை நிலங்களோ இல்லாமல் இருக்குமேயானால் அப்படிப்பட்ட பகுதிகளிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் மற்றும் இயற்கை வாசஸ்தலங்களை சுற்றுலா மையங்களாக்கி, பயணிகளைக் கவரும் சுற்றுலா மையமாக்கினால் அந்த பிராந்தியமே பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைகிறது. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு 'கஜுராகோ' ஆகும்.

Scanned by CamScanner

கஜுராகோ என்ற கலைச்செழுமை வாய்ந்த சுற்றுலா ஸ்தலம் மத்தியப் பிரதேசத்தில் பன்னா என்ற ஊரிலிருந்து முப்பது மைல் தூரத்தில் உள்ளது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கஜுராஹோ உலகமக்களின் பார்வைக்கு தென்படாத போக்குவரத்து வசதியற்ற குக்கிராமமாகவே இருந்தது. ஆனால் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் தான் எழுதிய 'புனித இந்தியா' என்ற நூலில் கஜுராஹோ கோவில்களைப்பற்றியும் அங்கு வடிவமைக்கப்பட்டுள்ள கண்ணைக்கவரும் சிற்பங்கள் பற்றியும் எழுதியிருந்தார். இதன் விளைவாக கஜுராஹோ உலக சுற்றுலாப் பயணிகளை கவர ஆரம்பித்தது. எனவே கஜுராஹோவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகமாயின.

எனவே இந்தியஅரசு கஜுராஹோ செல்ல நல்ல சாலைவசதி, ரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து வசதி செய்துகொடுத்தது. தங்குவதற்கு விருந்தினர்மாளிகை, நட்சத்திர விடுதிகள், உணவகங்கள், தபால் தந்தி போக்குவரத்து, வங்கி வசதி, கலாச்சார மையங்கள் போன்றவைகளும் உருவாகி விட்டன. இதனால் அந்தப்பகுதியே வளர்ச்சியடைந்து விட்ட என்பதை நாம் நேரடியாகவே காண்கிறோம். எனவே சுற்றுலா பிராந்திய அளவிலான வளர்ச்சியடைய முக்கிய காரணமாகும்.

## 8) சுற்றுலாத் துறையின் பன்முக விளைவு

**(Multiple effects):**

சுற்றுலாவிற்கு பயணிகளின் வருகையால் பல்வேறு துறைகள் வளர்ச்சி யடைந்து வருமானம் கிடைக்கிறது. இதனாலும் பொருளாதார வளர்ச்சி மேம்படுகிறது. அடிப்படை வசதிகளான சாலைப்போக்குவரத்து ரயில் போக்குவரத்து, விமானப்போக்குவரத்து, மின்சாரவசதி, தண்ணீர்வசதி, தரமான உணவு வசதி, கட்டிடப்பணிகள், அருங்காட்சியகங்கள், கேளிக்கை விடுதிகள், தேசியப் பூங்காக்கள் போன்றவை குறைந்த மூலதனத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காகத் தொடங்கப்பட்டு பல தரப்பட்ட துறைகளுக்கு இது அதிக லாபத்தைத் தருகிறது.

இவ்வாறு சுற்றுலா ஒரு நாட்டின் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கு உரிய பங்கைச்செலுத்துகிறது என்பதை அறியலாம். நாட்டின் பல துறைகளிலும் சீரான வளர்ச்சி ஏற்பட்டு தேசிய வருவாய் உயர்கிறது. சுற்றுலாத் தொடர்புடைய பல்வேறு துறைகள் வளர்ச்சியடைவதுடன் மனித சக்தியும் வளர்ச்சியடைகிறது. முன்னேற்றமடையாத நாடுகளின் பொருளாதாரம் வலுப்படுத்தப்பட்டு வளர்ச்சி யடைகிறது. அந்நிய செலாவணி அதிகமாகக் கிடைக்கிறது. எனவே சுற்றுலாத் துறையானது ஒவ்வொரு நாட்டிலும் அதிக பொருளாதர முக்கியத்துவம் பெற்று வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

Scanned by CamScanner

# 18

## சுற்றுலா வேலைவாய்ப்புகள்

### சுற்றுலா - சேவைத் துறை

சுற்றுலாத் துறை சேவைத் துறையாக உள்ளதால் பலதரப்பினருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. சுற்றுலாத் துறையின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏராளமானோர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். சுற்றுலாத் தலங்களில் உள்ள மக்களுக்கும் மிகுதியான வேலைவாய்ப்பு கிடைக்கிறது. பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையிலுள்ள இடங்களில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து, அதன் மூலம் வேலைவாய்ப்பும், வருவாயும் பெறுகின்றனர். காலப்போக்கில் அவ்விடங்களும் வளர்ச்சி பெறுகின்றன.

### இருவகையினருக்கு வேலைவாய்ப்பு

சுற்றுலாத் துறை பயிற்சி பெற்றோர், பயிற்சி பெறாதவர்கள் என இருவகையினருக்கும் பல நிலைகளில் வேலைவாய்ப்பு அளிக்கிறது. மேலாளர், கணக்காளர், எழுத்தர், தட்டச்சர், உணவு தயாரிப்போர், சலவைத் தொழிலாளர், விடுதிக் காவலர், விடுதிப் பணியாளர், தோட்டக்காரர், வாகன ஓட்டுநர், பயணமுகவர், சுற்றுலா வழிகாட்டி, விற்பனையாளர் போன்ற பல்வேறு துறையினரும் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். நேரடியாகச் சுற்றுலாத் தொழிலில் பணியாற்றுகிறவர்கள் தவிர, அதனைச் சார்ந்துள்ள பல தொழில்களிலும் வேலை

Scanned by CamScanner

வாய்ப்புகளைப் பெருக்குகிறது. எடுத்துக்காட்டாக, பானங்களையும், உணவு வகைகளையும் தயாரிக்கத் தேவைப்படும் பொருட்களை உற்பத்தி / விற்பனை செய்யும் தொழில், கட்டில், மேசை, நாற்காலி, மின் விசிறி, மெத்தை, மெத்தை விரிப்பு போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுவோர்க்கு வேலையும், ஊதியமும் கிடைக்கிறது. சுற்றுலாவினால் நேரடி வேலைகளைத் தவிர, சுமார் 1255 வகை துணைத்துறை வேலைகளும் வளர்ந்து வருகின்றன. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அமைக்கப்பட்ட பூங்காக்கள், பெருகி வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளை முன்னிட்டுக் கட்டப்படும் நட்சத்திர விடுதிகள், விமான நிலையங்கள், பாதைகள் போன்றவற்றைக் கட்டவும், பழுதுபார்க்கவும் அமர்த்தப்படும் பணியாளர்கள், புகைப்படக் கலைஞர்கள் போன்ற ஏராளமானவர்களுக்கு வேலையும், ஊதியமும் கிடைக்கிறது.

### கண்காட்சிகளில் வேலைவாய்ப்பு & கலைஞர்களுக்கு வாய்ப்பு

சுற்றுலாக் கண்காட்சிகளில் தனியார் நிறுவனங்கள் அரங்குகள் அமைத்து, சுற்றுலாப் பயணிகளுக்குத் தகவல்களைத் தருவதிலும், அவர்களின் தயாரிப்புகளை விற்பனை செய்வதன் மூலமாகவும் வேலைவாய்ப்பும் வருமானமும் பெறுகின்றனர். சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் நடத்தப்படும் விழாக்களில் இசை, நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்க கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் வருமானம் பெருகி வாழ்க்கைத் தரம் உயருகிறது. நலிந்து வரும் நாட்டுப்புறக் கலைகளுக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலம் அக்கலைஞர்கள் வாழ்வில் வளம் பெறுகின்றனர்.

### பணப்புழக்கம்

சுற்றுலாப் பயணிகள் செலவிடும் பணம், பல கைகள் மாறி, பல பொருளியல் துறைகளை ஊக்குவிக்கிறது. விடுதியில் தங்கியதற்கான தொகையை ஒரு சுற்றுலாப் பயணி, தரும்போது, அந்தத் தொகையில் பெரும் பகுதி அவருக்கு உணவாகவும், பானமாகவும், சலவை சேவையாகவும், கேளிக்கைகளாகவும் பொருள் வடிவிலும் சேவை வடிவிலும் வழங்கியோருக்குக் கொடுக்கப்படுகிறது. பணம் பெறுவோரும் தங்கள் தொழிலோடும், பணியோடும் தொடர்புடையோருக்குப் பணம் கொடுக்கிறார்கள். இவ்வாறு பணம் பல துறைகளில் புழங்கி,



Scanned by CamScanner

பலருக்கும் பயன்படுகிறது. சுற்றுலாத் தொழிலுக்குப் பொருட்களையும், பணிகளையும் வழங்கும்வேறு பல தொழில்களுக்கும் மறைமுகமாக உதவுகிறது. உடல் முழுவதும் இரத்தம் ஓடி, எல்லாப் பாகங்களுக்கும் சக்தியையும், சுறுசுறுப்பையும் தருவது போல், சுற்றுலா வருவாய் தேசிய பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் ஊட்டமளிக்கிறது.

## விடுதிகளில் வேலைவாய்ப்பு

சுற்றுலா வளர்ச்சியில் விடுதிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. சுற்றுலாவின் அடிப்படைத் தேவைகளில் தங்குமிடமும் ஒன்றாகும். வசதியுள்ள விடுதிகளைப் பெற்றுள்ள காரணத்தால், சில சுற்றுலாத் தலங்களுக்குப் பயணிகள் அடிக்கடி விரும்பிச் செல்கின்றனர். நல்ல விடுதிகள் உள்ள இடங்களில் சுற்றுலாப் பயணிகள் பல நாட்கள் தங்குவர். இதனால் உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்ப நிறுவனங்களில் படித்த இளைஞர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்புகள் பல்கிப் பெருகும் நிலை ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத் தலங்களில் புதிய விடுதி கட்டுவதற்கு இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் மானிய உதவி அளிக்கிறது. அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களில் விடுதிகள், பொழுதுபோக்குப் பூங்காக்கள் கால்ஃப் மைதானம், படகு இல்லங்கள் போன்ற சுற்றுலாத் திட்டங்களைத் தொடங்கும் தனியாருக்குத் தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறையும் மானிய உதவி அளிக்கிறது. இந்த விடுதிகளில் அமைக்கப்படும் வசதிகளுக்கேற்ப, ஒன்று முதல் ஐந்து வரையிலான நட்சத்திர அந்தஸ்து வழங்கப்படுகிறது. இதற்கென இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் நிர்ணயித்துள்ள கட்டண விவரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| ஒரு நட்சத்திர விடுதி | - ரூ 1500/- |
| இரண்டு நட்சத்திர விடுதி | - ரூ 2500/- |
| மூன்று நட்சத்திர விடுதி | - ரூ 3400/- |
| நான்கு நட்சத்திர விடுதி | - ரூ 5000/- |
| ஐந்து நட்சத்திர விடுதி | - ரூ 6000/- |
| ஐந்து நட்சத்திர விடுதி (சொகுசு) | - ரூ 7500/- |



Scanned by CamScanner

இந்த நட்சத்திர பாகுபாடு செய்வதற்கு மாநில அரசின் சுற்றுலாத் துறைச் செயலாளர் தலைமையில், இந்திய அரசின் சுற்றுலா அமைச்சக வட்டார இயக்குநர் அடங்கிய ஒரு வல்லுநர் குழு விடுதிகளைப் பார்வையிட்டு, தக்க பரிந்துரைகளை இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்திடம் அளிக்கும். இப்பரிந்துரைகளின் அடிப்படையில், விடுதிகளுக்குரிய நட்சத்திர அந்தஸ்து வழங்கப்படுகிறது.

### வேலைவாய்ப்பின் தன்மை

சுற்றுலாத் துறை மூலம் வேலைவாய்ப்பு பெறுபவர்களுள் தொழில் ரீதியான பயிற்சி பெறாத கிராமப்புற கைவினைத் தொழிலாளர்கள் அதிகப் பயனடைகிறார்கள். இவர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களைச் சுற்றுலாப் பயணிகள் விரும்பி வாங்கிச் செல்வதால், பயிற்சி, பெறாதவர்களாக இருந்தபோதிலும், அந்நியச் செலாவணிக்கு உறுதுணை புரிகிறார்கள். ஆனால், தற்காலத்தில் தொழில் ரீதியான பயிற்சி பெற்றவர்களையும், பட்டம் பெற்றவர்களையும் மட்டுமே விடுதிகள், நிறுவனங்கள் வேலைக்கமர்த்த விரும்புகின்றன. பயண முகவர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் போன்ற பணிகளுக்கும் பட்டம் மற்றும் பயிற்சி பெறுவதன் அவசியத்தை இவை வலியுறுத்துகின்றன.

சுற்றுலாத் துறையில் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகள் ஒரு குறிப்பிட்ட காலத்தோடு முடிந்து விடும். சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் காலங்களில் மட்டுமே அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என்பது சிலரது கருத்து. இந்தியா போன்ற வளரும் நாடுகளைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் ஆதரவு, மாவட்ட, கிராமப்புறச் சுற்றுலா மையங்களின் வளர்ச்சி, பயணச் சலுகைகள், எளிமையாக்கப்பட்ட பயணங்கள் போன்றவை சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரிப்பதால், சுற்றுலாத் துறையில் பணியாற்றுவோர் நிரந்தர வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் தேவைகளான போக்குவரத்து வாகனம், உணவகங்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றை சுற்றுலாத் துறை நிறைவு செய்கிறது.



Scanned by CamScanner